தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1970 செப்டம்பர் 8.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Japanese Goodwill Mission

* 289 *Q*.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether he met a Japanese Goodwill Mission about the 13th November 1969?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையில் சுத்திகரிப்பு ஊழியர்கள் வேலை நிறுத்தம்.

* 290 **வினா.—திரு. கரு. சீமைச்சாமி:** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் 15-10-1969-ல் சுத்திகரிப்பு ஊழியர்கள் திடீரென வேலை நிறுத்தம் செய்தார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

திரு. எம். பூபதி: தலைவர் அவர்களே, மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரி சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் எக்காரணத்தை முன்னிட்டு வேலைநிறுத்தம் செய்தார்கள்? அவர்களுடைய கோரிக்கைகள் என்ன? அவற்றைத் தீர்ப்ப தற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? குறைந்த பட்ச வாழ்க்கைக் கேற்ற வசதிகளையாவது இந்த அரசு அவர்களுக்கு அளிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: துப்புரவுத் தொழிலாளர்கள் கோரிக்கை வைத்துச் செய்யப்பட்ட வேலைநிறுத்தம் அல்ல இது. 14-7-1970 அன்று ஒரு துப்புரவுத் தொழிலாளிக்கு மார்பு வலி ஏற்பட்டது. அவர் காஷுவாலிடி பிரிவில் பணிபுரிந்து வந்தார். உடனே அவர் ஆஸ்பத்திரியில் இருந்து திரு. கே. குமாரசுவாமி என்ற டாக்டரிடம் அனுப்பப்பட்டார். அவரை குமாரசுவாமி வெளியே போ என்று சொல்லித் திட்டியதாக அந்தத் தொழிலாளி குறைபட்டுக்கொண்டு அன்று இரவே 11½ மணிக்குத் தன் கழுத்தைத் தானே அறுத்துக் கொண்டுவிட்டார். உடனே அவர் அறுவைச் சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பப்பட்டார். ஆயினும் அவர் அங்கே இறந்துவிட்டகாரணமாக மறுநாள் காலையில் துப்புரவுத் தொழிலாளர்கள் அத்தனைபேரும் வேலைநிறுத்தம் செய்தார்கள். டீன் அவர்கள் தலையிட்டு டாக்டர் கே. குமாரசுவாமியை விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்தவுடன் அத்தனைபேரும் வேலைக்குத் திரும்பிவிட்டார்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

அந்த டாக்டர்மீது விசாரணை செய்யப்பட்டு அந்த இடத்தில் இருந்து வேறு இடத்திற்கு அவர் மாற்றப்பட்டிருக்கிறார். அவர்மீது தக்க நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

Pupils of Vadapathimangalam Elementary School

* 291 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether a number of pupils suffered from food poison in the Vadapathimangalam Elementary School in Thanjavur District around 4th February 1970 after consuming the Midday Meal?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நச்சுணவினுல் மாணவர் யாரும் பாதிக்கப்படவில்லை. எனினும் உணவில் பல்லி காணப்பட்டதாக மற்றொரு மாணவன் கூச்சலிட்டதன் விளைவாக, இரு மாணவர்கள் வாந்தி எடுத்தனர். அவ்வுணவு முற்றிலும் தவிர்க்கப்பட்டதுடன் எச்சரிக்கையாக எல்லா மாணவர்களுக்கும் மருத்துவமனையில் இரைப்பை துப்புரவு (stomach wash) செய்யப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 292, 293, 294, 295, 296 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

கோழிப் பண்ணைகளில் புதிய ஆராய்ச்சி

* 297 வினு.—திரு. எம். பூபதி : மாண்புமிகு உணவு-வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கோழிப்பண்ணைகளில் ஒவ்வொரு கோழியும் ஒரே நாளில் இரண்டு முட்டைகள் இடச்செய்யும் ஆராய்ச்சி நடத்தப்பட்டதா?

(இ) ஆம் எனில், இதில் வெற்றி ஏதேனும் கிட்டியதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

திரு. எம். பூபதி : நம்முடைய கோழிப் பண்ணைகள் நட்டத்தில் நடைபெறுவதாக மூடப்பட்டு வருகின்றனவே, ஆனல் ருஷ்யா, சீனு போன்ற நாடுகளில் பகல் போலவே இரவு நேரங்களிலும் விளக்குகளைப் பகல்போலப் போட்டு ஒரு நாளைக்கு இரண்டு தடவை இரவும்கூட கொழிகள் முட்டையிடச்செய்கிறார்களே, நம் நாட்டிலும் அதைப்போல நம் மாநிலத்திலும் இரு முறை முட்டையிடும் முறையைக் கொண்டுவர அமைச்சர் தலைமையில் ஒரு குழுவைப்போட்டு வெளிநாடு சென்று அதைப் பரிசீலித்து வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அது போன்ற தகவல் கிடையாது. குழு அமைக்கின்ற உத்தேசம் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : நம் மாநிலத்தில் கோழிப் பண்ணைகள் மூடப்பட்டு வருகின்றன. அதற்காகக் கட்டப்பட்ட கட்டடங்கள் வீணுகக் கிடக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கோழி இரண்டு முட்டையிடுவதைப் பற்றிய கேள்வி.